OS.No. 100/2016

Dated : 16.10.2024

P.W- 1 : பாண்டுரங்கன்

**<u>2, 3,5,6</u>** <u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> **<u>:-</u>**

1) தாவா சொத்து ஆணையம்பட்டி கிராமத்தில் ச.எண். 28 ஆகும். அதில் 6 உட்பிரிவுகள் உள்ளன. 28ன் கீழ் 1,4,5,6,9,10 ஆகிய சொத்துக்களின் மீது தான் வழக்குகள் நடைபெற்றுவருகிறன். இந்த வழக்கை பொருத்தவரை 28/6 மற்றும் 9 உட்பிரிவுகளுக்கு வழக்கு நடைபெறுகிறது. 28/1 மற்றும் 4 பொருத்து இதே நீதிமன்றத்தில் தாவா எண். 73/2015 நடைபெற்றுவருகிறது. அதே போல 28/5 மற்றும் 10 பொருத்து இதே நீதிமன்றத்தில் தாவா எண். 173/2015 நடைபெற்றுவருகிறது.

2) இந்த 3 வழக்குகளிலும் நான் சுவாதீனத்தில் இல்லை என்றால் தற்சமயம் இல்லை. 1990 வரை நான் சுவாதீனத்தில் இருந்தேன். நான் சொல்வது போல தாவா சொத்துகளில் எவ்போதுமே நான் சுவாதீனத்தில் இல்லை என்றும் வழக்கிற்காக 1990 வரை சுவாதீனத்தில் இருந்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பா வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இருந்தார். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 3 வழக்கிறஞர் அறிவுப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். 11.07.2011ல் ச.எண். 28/5 மற்றும் 10 சொத்துகள் குறித்து சுப்பரமணியன் வழக்கறிஞர் வைத்து சட்ட அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான்.

3) ச.எண். 28/5 மற்றும் 10 சொத்துகள் குறித்து வடிவேல் வழக்கறிஞர் வைத்து 03.04.2012ல் சட்ட அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். பின்னிட்டு 31.07.2013ல் தற்போதைய வழக்கறிஞர் வைத்து எல்லா சர்வே எண்களுக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு சகோதரர்களுடன் சேர்த்து அனுப்பினோம் என்றால் சரிதான். 1990 முதல் சட்ட அறிவிப்பு காலமான 2011 வரை வழக்கு சொத்துகள் குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

4) வழக்கே சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்றும் சுவாதீனத்தை ஒப்படைக்கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துகளில் ஏற்பட்ட

ஆவணங்கள் குறித்து பரிகாரங்கள் எதுவும் கேட்கவில்லை. நான் கோரியுள்ள விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் கால வரையறை சட்டப்படி பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 12.09.1974 ல் இருந்தே இறந்து போன 1ம் பிரதிவாதி தாவா சொத்துகளில் சுவாதீனத்தில் இருந்து வந்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்துகளில் சுவாதீனத்தில் இருந்தார் என்பதை நான் ஒப்புக்கொள்ளவில்லை.

5) நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலே 1ம் பிரதிவாதி தாவா சொத்துகளில் சுவாதீனத்தில் இருந்தார் என்பதை ஒப்புக்கொண்டுள்ள நிலையில் அதை மறைத்து நான் சாட்சியம் சொல்ல இயலாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சுவாதீனத்தின் இருந்தன் பேரில் 31.08.1980 ல் வருவாய் துறையில் அவருக்கு பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் பட்டா உள்ளது. அவர் பெயரில் பொய்யாக பட்டா வாங்கப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதியின் இறப்பின் பின்னிட்டு 2 முதல் 5 பிரதிவாதிகள் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

6) 1ம் பிரதிவாதி சுவாதீனத்திற்கு பின்னிட்டு அவருடைய வாரிசுகளான 2 முதல் 5 பிரதிவாதிகள் சட்டப்படியான காலத்திற்கு மேற்பட்டு சுவாதீனத்தில் இருந்து வருவதால் அவர்கள் உரிமையை தக்கவைத்துக்கொண்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் கோரியுள்ள இரண்டு பரிகாரங்களும் உரிய சட்ட காலத்திற்குள் கோராததால் என்றால் அந்த உரிமையை நான் இழந்துவிட்டோம் என்றால் சரியல்ல. சுவாதீனத்தில் இருந்ததை காண்பிக்க கூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை.

7) மேற்படி பட்டா சம்மந்தமாக ரத்து செய்ய கோரி நடவடிக்கை கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அந்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- S.Ganesan**
**Subordinate Judge,**
**Attur.**